IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: OS.75/2024
DEPOSITION OF WITNESS: PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | ராமன் | Caste/ஜாதி | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | கண்ணகவுண்டர் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | ஆவணியாபுரம் | Religion/ சமயம் | : | |
| Taluk/தாலுக்கா | : | சேத்துப்பட்டு | Age/வயது | : | |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 2nd day of January 2025.

**முதல் விசாரணை**

நான் ஆவணியாபுரம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 16.10.2002 தேதியில் தாவா 1 முதல் 7 ஷெட்யூல் சொத்தினை வாதிக்கு சேர வேண்டிய குடும்ப பாக சொத்தினை ஆவண எண்.55/2002ன் படி வாதியின் தகப்பனார் கண்ணகவுண்டர் வாதிக்கு எழுதி வைத்த உயில் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

2. 12.12.2005 தேதியில் வாதி பிரதிவாதியிடம் இருந்து ஆவண எண்.1717/05 படி தாவா 6ம் சொத்தினை கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

3. 26.07.2006 தேதியில் வாதி பால் (எ) டபால் என்பவரிடம் இருந்து ஆவண எண்.885/06 படி தாவா 7ம் சொத்தினை கிரையம் பெற்றதற்க்கான கிரைய ஆவணம் நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

4. வாதி பெரணமல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

5. 20.01.2020 தேதியில் வாதி மக்கள் குறை தீர்க்கும் நாளில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கொடுத்த புகாரின் நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

6. 28.01.2020 தேதியில் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகும்.

7. 30.01.2020 தேதியில் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் அட்டை வா.சா.ஆ.7 ஆகும்.

8. தாவா அயிட்ட சொத்துக்களில் வாதி பெயரில் உள்ள அடங்கல் கணக்கு வா.சா.ஆ.8 ஆகும்.

9. தாவா அயிட்ட சொத்துக்களின் பட்டா கணினி நகல் வா.சா.ஆ.9 ஆகும்.

10. தாவா அயிட்ட சொத்துக்களுக்கு வாதி கட்டிய வாய்தா ரசீதுக்களின் எண்ணிக்கை-4 வா.சா.ஆ.10 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.